IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS

S.C.NO.44/2025

Deposition of Witness for P.W.13

| | | |
|---|---|---|
| NAME | - | திரு.G.நந்தகுமார் |
| OCCUPATION | - | துணை காவல் கண்காணிப்பாளர் |
| AGE | - | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 23.03.2026.

எதிரிகள் ஆஜர். 1ம் எதிரி ஆஜர் இல்லை மனு ஏற்பு. 4ம் எதிரி ஆஜர் படுத்தப்படவில்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

<u>முதல் விசாரணை-</u>

நான் தற்போது அணைக்கட்டு உட்கோட்த்தில் துணை காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2020 ஆம் ஆண்டு நான் காட்பாடி வட்ட ஆய்வாளராக இருந்தேன். அப்போது காட்பாடி விருதம்பட்டு மற்றும் திருவலம் காவல் நிலைய என் காவல் வட்ட ஆளுகைக்குட்பட்டதாகும். கடந்த 24.10.2020 ஆம் தேதி திருவலம் காவல் நிலைய குற்ற எண்.262/2016 வழக்கின் எதிரிகளையும் மற்ற காட்பாடி காவல் நிலையம் குற்ற எண்களில் சம்மந்தப்பட்ட எதிரிகளை கைது செய்ய வேண்டி கு.வி.மு.ச 55 ன்படி உதவி ஆய்வாளர் ராஜசேகர், ஜகன்நாதன், ஜகதீசன், விக்னேஷ், சிறப்பு உதவி ஆய்வாளர்கள் குமரவேல் மற்றும் தலைமைக் காவலர் 2160 தனி அலுவலராக அனுப்பி வைத்தேன். மேற்படி தனி அலுவலராக சென்ற உதவி ஆய்வாளர் ராஜசேகர் குழுவினர் பெங்களூரு சென்று 12.11.2020 தேதி மாலை 07.30 மணிக்கு White field ல் எதிரிகளான

ஜானி (எ) ஜான் பால்ராஜ், மைக்கேல் என்பவர்களை கைது செய்தும் வழக்கு சொத்தை கைப்பற்றியும் 13.11.2020 தேதி காலை 05.00 மணிக்கு காட்பாடி காவல் நிலையத்தில் என் முன் ஆஜர் செய்த எதிரிகளை விசாரணை செய்தும் சாட்சிகளான அருண்குமார் மற்றும் மணி என்பவரை நிலையத்திற்கு வரவழைத்து அவர்கள் முன்னியலையில் மாலை 05.30 மணிக்கு ஜானி (எ) ஜானி பால்ராஜ் என்பவரது ஒப்புதல் வாக்குமூலமும் மாலை 08.30 மணிக்கு மைக்கேல் (எ) மைக்கேல் டைசன் என்பவரது ஒப்புதல் வாக்குமூலமும் பதிவு செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 06.10.2016 தேதி காலை 06.00 மணிக்கு காட்பாடி காவல் நிலைய குற்ற எண்.478/2016 என்ற வழக்கில் எதிரி ராஜேஷ்குமார் என்பவரை காவல் ஆய்வாளர் திரு.சுரேஷ் பாபு பாலாறு Bridge சுடுகாட்டிடம் கைது செய்து சாட்சிகளான வெங்கடேசன், செல்வகுமார் அவர்கள் முன்னிலையில் ராஜேஷ் குமார் என்பவரது ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 01.01.2018 ஆம் தேதி காவல் ஆய்வாளர் பழனி விருதம்பட்டு குற்ற எண். 537/2017 வழக்கில் காலை 08.30 மணிக்கு முருகன் (எ) கரிகிரிமுகனை கைது செய்து சாட்சிகள் சலீம் காதர் என்பவர் முன்னிலையில் விசாரித்து ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 13.06.2020 ஆம் ஆண்டு இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட தலைமறைவு எதிரி நவீன் என்பவரை உதவி ஆய்வாளர் திரு.பிச்சாண்டி பகல் 01.00 மணியளவில் திருவலம் காட்பாடி

ரோடு சேவூர் FCI குடோன் கேட்டிடம் கைது செய்து சாட்சிகள் Harish, அரவிந்தன் முன்னிலையில் எதிரி நவீன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 14.05.2016 காட்பாடி காவல் நிலைய குற்ற எண்.2005/2016 வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரி அலேக்ஸ் என்பவரை வள்ளிமலை கூட்ரோட்டிடம் சாட்சிகள் விநாயகம் மற்றும் கலைமணி முன்னிலையில் கைது செய்து எதிரி அலேக்ஸ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து இவ்வழக்கில் எதிரி சம்மந்தப்பட்டுள்ளதால் எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். சாட்சிகளை விசாரணை செய்துள்ளார். 21.07.2020 பகல் 03.00 மணியளவில் விருதம்பட்டு பழைய பாலாறு Bridge அருகில் விருதம்பட்டு காவல் நிலைய குற்ற எண்.880/2020 என்ற வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரியான ரஞ்சித் குமாரை சாட்சிகள் பிரசாந்த், தேசிகாமணி முன்னிலையில் கைது விசாரிக்க எதிரி ரஞ்சித் குமார் கொடுத்த தன்னிச்சையான வாக்குமூலத்தை காவல் நிலைய உதவி ஆய்வாளர் ராமமூர்த்தி பதிவு செய்து எதிரி ரஞ்சித் குமார் இவ்வழக்கில் சம்மந்தப்பட்டுள்ளதால் அவரை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினோம். சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தோம். மேற்படி வழக்கின் புலன் விசாரணை சாட்சிகளான உதவி ஆய்வாளர் திரு.ராஜசேகர், திரு.ராஜாராம், திரு.பிச்சாண்டி, காவல் ஆய்வாளர் திரு.சுரேஷ்பாபு, திரு.பழனி, திரு.புகழ் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி வழக்கின் புலன் விசாரணை முடித்து ஆஜர் எதிரிகள் மீது இ.த.ச.

சட்டப் பிரிவுகள் 342, 364(A) பிரிவின் படி குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்தேன். பட்டியல் சாட்சி 2 மகாலிங்கம் கடத்தப்பட்டவர், பட்டியல் சாட்சி 3 சுந்தரேசன் அவர்கள் தற்போது வழக்கிற்கு பின்னர் இறந்துவிட்டார்கள்.

குறுக்கு விசாரணை-

கு.வி.மு.ச.55 ன் படி பிறப்பித்த ஆணையை நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை. இவ்வழக்கின் முழுமையான விசாரணை அதிகாரி நான் இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கின் முழுமையான விவரம் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. காவல் நிலையத்திலிருந்து சம்பவயிடத்திற்கு சுமார் 20 கிலோ மீட்டர் இருக்கும். சம்பவயிடத்திலிருந்து 1 மணி நேரத்திற்குள் காவல் நிலையத்திற்கு வந்துவிடலாம். புகார்தாரர் வீட்டிலிருந்து காவல் நிலையத்திற்கு 1 மணி நேரத்திற்குள் வந்துவிடலாம். சம்பவம் நடந்து ஒரு நாள் கழித்து தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தோம் என்றால் வாதி எதிரிகளுக்கு பயந்து கொண்டு தாமதமாக புகார் கொடுத்தார். முதல் தகவல் அறிக்கையில் காலத்தாமதம் குறித்து குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. உண்மையான எதிரிகளை கண்டுபிடிக்க முடியாமல் புகார்தாரர் கொடுத்த புகாரின் மீது வழக்கை முடிக்க வேண்டும் என்பதற்காக எதிரிகள் மீது பொய் வழக்கு தாக்கல் செய்தோம்

என்றால் சரியல்ல. எதிரிகளை சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் கைது செய்யவில்லை என்றும் எதிரிகள் எவ்வித ஒப்புதல் வாக்குமூலமும் அளிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கிற்கான ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தோம் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 23.03.2026 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN
Digitally signed by P V SANDILYAN
Date: 2026.03.23 19:08:38 +0600

Additional District Judge(FTC),
Vellore